

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்ட படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண நிதியுதவித் தொகைக்கான ஆணைகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் வழங்கினர். உடன், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், உதவி இயக்குநர் (மீன் வளத்துறை) ந.பஞ்சராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சென்னை பறக்கும் ரயில் நிறுவனம் (MRTS)

# சென்னை மெட்ரோவுடன் இணைப்பு எப்போது?

### மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1- சென்னை பறக்கும் ரயில் நிறுவனத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கையகப்படுத்துவது குறித்த கேள்விகளை திமுக துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் எழுப்பினார்.



சென்னை மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் (MRTS) எனப்படும் சென்னை பறக்கும் ரயில் திட்டத்தின் செயல்பாடு மற்றும் நிர்வாகத்தை இந்திய ரயில்வேயிடமிருந்து, சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) க்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS இன் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பை CMRL க்கு முழுமையாக மாற்றுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

இந்த மாற்றத்தை சுமுகமாக செயல்படுத்துவதற்காக நிதி, செயல்பாடு மற்றும் சட்ட ரீதியான விவகாரங்களை அரசு பரிசீலித்து வருகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS நெட்வொர்க்கை CMRL க்கு முழுமையாக மாற்றுவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன? இந்த ஒருங்கிணைப்பின் மூலம் ரயில் பயணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?” என்ற கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியிருந்தார்.

### ‘பச்சா’ன் அட்டைத் திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளில்

# தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

### காஞ்சிபுரம் க.செல்வம் கேள்விக்கு – ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சகம் பதில்!

புதுடெல்லி, ஆக. 1 - 29.07.2025 அன்று நடைபெற்ற நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகதிற்க்கு காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் (PEH CHAN CARD SCHEME) பெஉற்சான் அட்டை திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை.

(ஆ) ஜவுளி அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் பெஉற்சான் அட்டைகளை வைத்திருக்கும் கைவினைஞர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் மற்றும் உரிமைகள் பற்றிய விவரங்கள்.

(இ) இந்தத் திட்டங்களின் கீழ் திறன் மேம்பாட்டுத் திட்டங் கள், வடிவமைப்பு பயிற்சி, சந்தைப்படுத்தல் ஆதரவு, கடன் வசதி மற்றும் சுகாதார ஆயுள் காப்பீடு ஆகியவற்றை அணுகுவதில் பெஉற்சான் (PEH CHAN) அட்டைதாரர்களுக்கு முன்னுரிமை கிடைக்குமா.

(ஈ) கடந்த ஐந்து ஆண்டுகளிலும் அரசாங்கத்தால் செயல்ப்படுத்தப்பட்ட தேசிய கைவினை மேம்பாட்டுத் திட்டம், விரிவான கைவினைப் பொருட்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிற திட்டங்களால் பயனடைந்த கைவினைஞர்களின் எண்ணிக்கை.

(2) கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவதில் மேற்கண்ட திட்டங்களின் செயல்திறன் குறித்து அரசாங்கம் ஏதேனும் தாக்க மதிப்பீடு அல்லது பயனாளி கருத்துக் கணக்கெடுப்பை நடத்தியுள்ளதா?

(ஊ) அப்படியானால், அத்தகைய மத்திப்பீடுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு க.செல்வம் கேள்விகள் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சகம் சார்பில் அளித்த பதில்கள் வருமாறு-

(அ) பெஉற்சான் (PEH CHAN) அட்டை முயற்சியின் கீழ், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

2022-2023 ஆண்டு கைவினைஞர்கள் பதிவு 5,356, 2023- 2024 ஆம் ஆண்டு 3,219, 20242025 ஆம் ஆண்டு 5,599, கடந்த மூன்று ஆண்டுகளில் 14,174 பேர், ஜுன் 2025 வரை 84,311 பேர் .

(ஆ) ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள மேம்பாட்டு ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகம், நாடு முழுவதும் கைவினைத் துறையின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் மேம்பாட்டிற்காக தேசிய கைவினைப் பொருட்டுகள் மேம்பாட்டுத் திட்டம் (NHDP) மற்றும் விரிவான கைவினைப் இரண்டு பொருட்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் (CH CDS) என திட்டங்களை செயல்படுத்துகிறது. இந்த திட்டங்களின் கீழ், சந்தைப் படுத்தல் நிகழ்வுகள், திறன் மேம்பாடு, தொகுப்பு மேம்பாடு, உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், கைவினைஞர்களுக்கு நேரடி நன்மை. உள்கட்டமைப்பு மற்றும் தொழில் நுட்ப ஆதரவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆதரவு மூலம் கைவினைஞர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்காக தேவை அடிப்படையிலான நிதி உதவி வழங்கப்படுகிறது. இது நாடு முழுவதும் உள்ள பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு பயனளிக்கிறது.



(இ) பெஉற்சான் (PEH CHAN) அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே மேம்பாட்டு ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகத்தால் நடத்தப்படும் திட்டங்களின் கீழ் சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்கள்.

(ஈ) கடந்த ஐந்து ஆண்டுகளில் NHDP & CHCDS திட்டம் மற்றும் ஜவுளி அமைச்சகத்தின் சமர்த் திட்டத்தின் கீழ் பயனடைந்த கைவினைஞர்கள் பின்வருமாறு:

2020-2021 ஆண்டு பயனடைந்த கைவினைஞர்கள் 95,284, 2021- 2022

2022- 2023 ஆம் ஆண்டு 1,48,358 பேர், 2023- 2024 ஆம் ஆண்டு 1,2, 164 பேர், 2024-2025 ம் ஆண்டு 1,02,601 பேர், 2025- 2026 (ஜுன் 2025 வரை)

மொத்தம் 79,387 கைவினைஞர்கள் பயனைடந்துள்ளனர்.

(உ) இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தால் அனைத்து திட்டங்களுக்கும் ‘பயனாளிகளின் உணர்வுகள் மற்றும் முன்முயற்சிகள் குறித்த கணக்கெடுப்பு என்ற ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. NHDP & CHCDS ஆகியவை இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு பயனாளிகள் மீதான திட்டங்களின் பன்முக தாக்கத்தை உள்ளடக்கியது.

(ஊ) ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள், 70% க்கும் மேற்பட்ட பயனாளிகள் மேம்பட்ட வருமானம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டைப் புகரளித்தனர். 75% க்கும் மேற்பட்ட பயனாளிகள் தங்கள் உற்பத்தித் தரங்களில் உறுதியான முன்னேற்றத்தைக் கூறினர். 60% க்கும் மேற்பட்டோர் உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் மேம்பட்ட உற்பத்தித் திறனைக் கண்டனர். புதிய சந்தைகளை அணுகும்போது 34% பேர் சவால்களை எதிர்கொண்டனர், 69% பயனாளிகள் இந்தத் திட்டம் அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களையும் உள்ளடக்கியது என்று நம்புகிறார்கள். மேலும் சுமார் 80% பயனாளிகள் இந்த திட்டம் நீண்ட காலத்திற்கு அவர்களின் வணிகங்களிலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஒப்புக்கொண்டனர்.

மேற்கண்ட ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், கைவினைஞர்களின் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு அளவுருக்களின் அடிப்படையில் சிறந்த அணுகலை உறுதி செய்வதை உறுதி செய்வதற்காக, வருடாந்திர சந்தைப்படுத்தல் நாட்காட்டியில் புதிய இடங்களைச் சேர்ப்பதன் மூலம், புதிய சந்தைகளுக்கு கைவினைஞர்களின் அணுகலை அதிகரிக்க, DC (கைவினைப் பொருட்கள்) அலுவலகம் ஒரு செறிவூட்டல் திட்டத்தைத் தயாரித்தது.

இவ்வாறு ஒன்றிய ஜவுளித் துறை சார்பில் பதிலளிக்கப்பட்டது.



கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கோவை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் சூலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக நெசவாளர் அணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் சாமிநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இருகூர் சந்திரன் உள்பட ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கும் இடம் ஆய்வு!

### அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு! எம்.எல்.ஏ.க்கள் ஒய்.பிரகாஷ் –தே.மதியழகன் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 1 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்டச் செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், தளி, சூளகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.13 கோடியே 49 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பேருந்து நிலையத்தில், 2 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு மற்றும் தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பயண பேருந்துகளுக்குப் பதிலாக, புதிய 8 மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகளை துவக்கி வைத்து, அந்திவாடி விளையாட்டு மைதானம் அருகில், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை ஆய்வு செய்து, தளி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.7 கோடியே 56 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பிலும், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் ரூ.2 கோடியே 10 இலட்சம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் துவக்கி வைத்து, பல்நோக்கு கட்டிடம், சின்னார் கிராமத்தில், மூன்றாவது புதிய பகுதிநேர நியாய விலைக் கடை ஆகியவற்றை திறந்து வைத்து, வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.3 கோடியே 82 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது: –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் என அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அதேப்போல பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் சரியான நேரத்திற்கு செல்லும் வகையில் பேருந்துகள் வழித்தடம் நீடிப்பு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குப் பேருந்து வசதி அளிப்பதற்காக, ஓசூர் முதல் நந்திமங்கலம் செல்லும் பேருந்தினை மாவத்தூர் வரையும், ஓசூர் முதல் தேன்கனிக்கோட்டை செல்லும் பேருந்தினை அரசு கலை, அறிவியல் கல்லூரி வரை இரண்டு வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பிற்கான மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் 2 கிராமங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 2,426 பேர் பயனடைவார்கள். மேலும், தற்சமயம் இயக்கப்பட்டு வரும் மகளிர் விடியல் பயண பேருந்துகளுக்குப் பதிலாக 8 புதிய பேருந்து சேவைகள் துவக்கி வைக்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து, தளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளான கல்லுபாளம் முதல் ராமாபுரம் வரை, நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.85 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலும், தளி ஜவளகிரி சாலை முதல் பாளையம் கிராமம் வரை (வழி:கொல்லப்பள்ளி) நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.66 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பிலும், பேளாளம் முதல் மாநில எல்லை வரை, முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.5 கோடியே 54 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பிலும், முதுகேரி முதல் தொட்டி வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.15 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பில் சாலை பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்றம் பாளையம் கிராமத்தில், தேசிய கிராம சுயாட்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.30 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட பணி, கொட்டாயூர் கிராமத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.13 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பில் உணவு தானிய கிடங்கு கட்டிட பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், காமன்தொட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, கனிமங்கள் மற்றும் குவாரிகள் திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 10 இலட்சம் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்து, காமன்தொட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கனிமங்கள் மற்று குவாரிகள் திட்டத்தின் கீழ், ரூ.9 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட பல்நோக்கு கட்டிடத்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், சின்னார் கிராமத்தில், 210 குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குந்தாரப்பள்ளி, போலுப்பள்ளி, சின்ன பொம்மரசனப்பள்ளி, குருபரப்பள்ளி, தம்மாண்டரப்பள்ளி, மணவாரனப்பள்ளி, கட்டாயம்பீடு, பதிமடுகு மற்றும் அலேகுந்தானி ஆகிய கிராமங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக, ரூ.3 கோடியே 82 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், தார் சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் கிராம ஊராட்சி செயலக கட்டடங்கள் உள்ளிட்ட புதிய வளர்ச்சி திட்ட பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமாரன், துணை செயலாளர் சின்னசாமி, ஒன்றியச் செயலாளர்கள் திவாகர், நாகேஷ், பாக்கியராஜ், ரகுநாத், கருணாகரன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, ஓசூர் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

### ஆகஸ்ட் 1 (2000)



பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.

இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.

கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் ‘நாவுக்கரசர்’ என அழைக்கப்பட்டவர்.

கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.

“என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**